முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1614

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.02.2024,** வியாழக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா போற்றி
ஞானிகள் பலம் கொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் போற்றுகின்ற குருராஜா போற்றி
வையகத்தை ஞான லோகமாக்க வந்த அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 17 ம் நாள், 29.02.2024, வியாழக்கிழமை)
ஆற்றல்பட அரங்கனின் நாமஜெபம்
அகிலமெல்லாம் முழங்க முழங்க
3. முழங்கவே பேருலகில் முழுமைபட
சுப்ரமணியர் என் ஞானம் களங்கமற
மகா சக்தியாக மக்களிடையே கருணையோடு பரவி
கலியுகத்தில் ஞானிகளாக உலகமக்கள் தேர்வு செய்யப்படுவர்
4. செய்யப்படுவர் அரங்கன் தர்மத்தை முன்மொழிந்து
சேவையாக உலகமெல்லாம்
ஆற்றுகின்ற அன்பர்கள் அனைவருமே
ஐயன் முருகன் என் ஆசியோடு
5. ஆற்றல்பட இந்த கலியுகத்தை
மாற்றும் மகா சக்திகளாக
ஆகவே உருவெடுத்து அரங்கன் தேடலில் அவர்களெல்லாம்
ஞானிகளாக அற்புதம்பட ஆக்கம் கண்டு அகிலத்துக்கு
6. ஞானத் தலைமையை உருவாக்கி
ஞானவான்கள் நிறைந்த ஞான பூமியாக
ஞானசித்தர் காலம் வருகின்ற
ஞானிகள் ஆட்சிக் காலமாக

7. ஆகவே மாற்றம் செய்து அற்புதத்தை
அரங்கன் அவதார நோக்கமாக நிறைவு செய்வர்
அருளிய சுப்ரமணியப் பெருமான் என்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—